


தமிழ்நாட்டை புறக்கணித்து மக்களை வஞ்சித்து வரும் ஒன்றிய பா.ஜ.க. அரசையும், அதற்கு துணைபோகும் அ.தி.மு.க.வையும் கண்டித்து, நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகம் நாமக்கல் நகர கிழக்கு, மேற்கு, தெற்கு, நகரம் மற்றும் நாமக்கல் ஒன்றியகழகம் சார்பில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் ,கே.ஆர்.என். இராஜேஸ்குமார் எம்.பி. தலைமை தாங்கி பேசினார். ஆர்ப்பாட்டத்தில் மேயர் கலாநிதி, துணை மேயர் பூபதி, நகர செயலாளர்கள் ராணா ஆனந்த், சிவக்குமார், மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள், மாநில மாவட்டக் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், கழகத் தொண்டர்கள் உள்ளிட்ட ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.



தமிழகத்தை வஞ்சிக்கும் ஒன்றிய பா.ஜ.க அரசைக் கண்டித்து கோத்தகிரி ஜான்சன் சதுக்கத்தில் தி.மு.க. தோழமைக் கட்சிகள் சார்பில் கோத்தகிரி ஒன்றிய தி.மு.க. செயலாளர் நெல்லை கண்ணன் தலைமை யில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் நீலகிரி மாவட்ட தி.மு.க. பொறுப்பாளர் கே.எம்.ராஜு கலந்துகொண்டு தமிழகத்தை எப்படியெல்லாம் பா.ஜ.க., அரசு வஞ்சிக்கிறது என்பதை பட்டியலிட்டு, ஒன்றிய பா.ஜ.க அரசிற்கும், இவர்களுக்கு ஒத்து ஊதும் அ.தி.மு.க.,வையும் கண்டித்து கண்டன முழக்கங்களை எழுப்பி கண்டன உரையாற்றினார்.

### கடந்த 3 ஆண்டுகளில் சூரிய, காற்றாலைத் துறையில்

# தமிழ்நாட்டுக்கான எரிசக்தித் திறன் முதலீடு ரூ.15,462 கோடி!

## தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. கேள்விக்கு ஒன்றிய அரசு பதில்!

புதுடெல்லி, பிப்.15-

கடந்த 3 ஆண்டுகளில் சூரிய, காற்றாலை துறையில் தமிழ்நாட்டுக்கான எரிசக்தி திறன் முதலீடு ரூ.15,462 கோடி என, தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. கேள்விக்கு ஒன்றிய அரசு பதில் தெரிவித்து உள்ளது.

தென்சென்னை தொகுதி மக்களவை உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் நாடாளுமன்ற மக்களவையில் கடற்கரை காற்றாலை தொடர்பான கேள்விகளை கேட்டு இருந்தார்.



அதாவது, "ஒரு ஜிகாவாட் திறன் கொண்ட இந்தியாவின் முதல் கடல் காற்று மின்சார டெண்டரை தமிழ்நாடு கடற்கரையில் தொடங்க அரசாங்கம் முன்மொழிகிறதா? இந்த நோக்கத்துக்காக தனுஷ்கோடி அருகே தேசிய காற்றாலை ஆற்றல் நிறுவனம் மதிப்பீடுகளை முடித்ததா அல்லது அதற்கான பணிகள் நடந்து வருகிறதா?, தேசிய கடல் காற்று கட்டமைப்பின் கீழ் தமிழ்நாட்டுக்கு ஏதாவது குறிப்பிட்ட நம்பகத்தன்மை இடைவெளி நிதி அல்லது சலுகைகள் ஒதுக்கப்பட்டுள்ளதா? கடல் காற்று ஆதரவு வழிமுறைகளை இறுதி செய்வதில் உள்ள தாமதங்கள் தமிழ்நாட்டின் புதுப்பிக்கத்தக்க முதலீடுகளின் வழியைப் பாதித்ததா?, நில கட்டுப்பாடுகளை எதிர்கொள்ளும் ஆனால் வலுவான புதுப்பிக்கத்தக்க உற்பத்தி மற்றும் ஏற்றுமதி திறனை எதிர்கொள்ளும் மாநிலங்களில் கடல் காற்று பயன்பாட்டை முன்னுரிமைப்படுத்த முன்மொழியப்பட்ட நடவடிக்கைகள் என்ன?" ஆகிய கேள்விகளை அவர் கேட்டார்.

இதற்கு ஒன்றிய மின்சாரம், புதிய மற்றும் புதுப்பித்தக்க எரிசக்தித் துறை இணை அமைச்சர் ஸ்ரீபாத் யெசோ நாயக் எழுத்துப்பூர்வமாக பதில் அளித்தார். அந்த பதிலில் கூறப்பட்டு இருப்பதாவது:

கடல் காற்றாலை திட்டங்களுக்கான 'செயல்திறன் இடைவெளி நிதி திட்டத்தை' அரசாங்கம் தொடங்கியுள்ளது. இதற்கான மொத்த செலவினம் ரூ.7453 கோடி ஆகும். இதில் ஒரு ஜிகாவாட் கடல் காற்றாலை திட்டங்களை நிறுவுதல் மற்றும் செயல்படுத்துதல் (குஜராத் மற்றும் தமிழ்நாடு கடற்கரையில் ஒவ்வொன்றும் 500 மெகாவாட்) மற்றும் கடல் காற்றாலை திட்டங்களுக்கான தளவாடத் தேவைகளைப் பூர்த்தி செய்ய 2 துறைமுகங்களை மேம்படுத்துதல் ஆகியவை அடங்கும். குஜராத் மற்றும் தமிழ்நாடு கடற்கரையில் ஒவ்வொரு 500 மெகாவாட் கடல் காற்றாலை திட்டங்களுக்கும் ஒதுக்கப்பட்ட நம்பகத்தன்மை இடைவெளி நிதி முறையே ரூ. 4064 கோடி மற்றும் ரூ. 2755 கோடி ஆகும்.

இருப்பினும், இடைவெளி நிதி போதுமானதாக இல்லாத பட்சத்தில் திட்டங்களின் திறனை விகிதாச்சாரமாகக் குறைக்கலாம். அல்லது சேமிப்பு ஏற்பட்டால் கூடுதல் திறனுக்கு இடைவெளி நிதி பயன்படுத்தப்படலாம்.

தமிழ்நாட்டு தளத்தின் காற்றாலை வள மதிப்பீட்டிற்காக தேசிய காற்றாலை ஆற்றல் நிறுவனம், மிதவையை நிறுவியுள்ளது. இந்நிறுவனம் தமிழகத் தளத்திற்கான புவி இயற்பியல் ஆய்வையும் மேற்கொண்டது. தமிழ்நாட்டின் கடல் காற்றுத் திட்ட மேம்பாட்டுக்கான டெண்டர், காற்றாலை வள மதிப்பீடு மற்றும் பிற ஆய்வுகளின் முடிவுகளுடன் இணைக்கப்பட்டுள்ளது.

மேலும், அந்நிறுவனம் தனுஷ்கோடி அருகே மெட்மாஸ்ட் அடிப்படையிலான காற்றாலை வள அளவீடுகளை முடித்துள்ளது. இந்த அறிக்கை அதன் வலைத்தளம் மூலம் பொது களத்திலும் வெளியிடப்பட்டது. ஒரு தொடர்ச்சியான ஆண்டிற்கான (அக்டோபர், 2013 முதல் செப்டம்பர், 2014 வரை) அளவீடு அடிப்படையில், தனுஷ்கோடியில் கடல் மட்டத்தில் இருந்து 102 மீட்டர் உயரத்தில் ஆண்டு சராசரி காற்றின் வேகம் வினாடிக்கு 8.65 மீட்டர் ஆகும். காற்றாலை அடர்த்தி சதுர மீட்டருக்கு 536 வாட் ஆகும்.

கடந்த 3 நிதியாண்டுகளில் தமிழ்நாடு மாநிலத்தில் சூரிய மற்றும் காற்றாலை துறையில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திறன் முதலீடு ரூ.15 ஆயிரத்து 462 கோடி ஆகும்.

தமிழ்நாடு உள்பட நாட்டில் கடல் காற்றாலை மின் திட்டங்களை உருவாக்க அரசு பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இவற்றில், மற்றவற்றுடன், பின்வருவன அடங்கும்.

நாட்டில் கடல் காற்றாலை ஆற்றலை மேம்படுத்துவதற்கான கட்டமைப்பை வழங்க அக்டோபர் 2015 இல் 'கடல் காற்றாலை ஆற்றல் கொள்கை' அறிவிப்பு வெளியானது.

ஆரம்ப கட்ட மேம்பாடுகளுக்காக, குஜராத் மற்றும் தமிழ்நாட்டின் கடற்கரையில் சாத்தியமான கடல் காற்று மண்டலங்கள் மீசோஅளவிலான ஆய்வு மூலம் அடையாளம் காணப்பட்டுள்ளன.

நவம்பர் 2017 ல் குஜராத் கடற்கரையில் தேசிய காற்றாலை ஆற்றல் நிறுவனத்தால் மிதவைகள் நிறுவுதல் மற்றும் 2 ஆண்டு காற்று தரவு சேகரிப்பு பணிகள், ஒரு ஜிகாவாட் திறனுக்கு சமமான ஒரு தளத்திற்கு புவி இயற்பியல், புவி தொழில்நுட்ப ஆய்வு, விரைவான இ.ஐ.ஏ. ஆய்வு, கடல்சார் ஆய்வு ( அலை மற்றும் மின்னோட்டம்) ஆகியவற்றை காற்றாலை ஆற்றல் நிறுவனம் நடத்தியுள்ளது.

தமிழ்நாடு கடற்கரையில் மேற்கொள்ளப்பட்ட 3 துளையிடங்களில் புவி தொழில்நுட்ப ஆய்வு நடத்தப்பட்டு உள்ளது. காற்றாலை வள அளவீட்டுக்காக தமிழ்நாட்டின் கடற்கரையில் 4 மிதவை நிறுவப்பட்டுள்ளன. தமிழ்நாடு கடற்கரையில் 500 மெகாவாட் தளத்திற்கான புவி இயற்பியல் ஆய்வும் நிறைவடைந்துள்ளது.

பல்வேறு மேம்பாட்டு மாதிரிகளைக் குறிக்கும் வகையில் ஜீலை 2022 இல் 'கடல் காற்றாலை மின் திட்டங்களை நிறுவுவதற்கான உத்தி அறிக்கை' வெளியிடப்பட்டது.

கடல் காற்றாலை மின் திட்டங்களை மேம்படுத்துவதற்காக கடல் பகுதிகளை குத்தகைக்கு விடுவதை ஒழுங்குபடுத்துவதற்காக கடல் காற்றாலை மின் குத்தகை விதிகள்,2023 அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒன்றிய அமைச்சரவை, கடல் காற்றாலை மின் திட்டங்களுக்கான 'செயல்பாட்டு இடைவெளி நிதி திட்டத்தை' அறிமுகப்படுத்தியுள்ளது. இதனை செயல்படுத்துவதற்கான திட்ட வழிகாட்டுதல்கள் 2024ம் ஆண்டு செப்டம்பர் 11ந் தேதி வெளியிடப்பட்டன.

பாரிஸ் ஒப்பந்தத்தின் பிரிவு 6.2 பொறிமுறையின்படி இருதரப்பு கூட்டுறவு அணுகுமுறைகளின் கீழ் கார்பன் கிரெடிட்களை வர்த்தகம் செய்வதற்கு பரிசீலிக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளின் பட்டியலில் ஆப்ஷோர் விண்ட் சேர்க்கப்பட்டுள்ளது.

31122032 அன்று அல்லது அதற்கு முன்னர் தொடங்கப்பட்ட ஆப்ஷோர் காற்றாலை மின் திட்டங்களுக்கு தரப்படுத்தப்பட்ட ஐஎஸ்டிஎஸ் கட்டணங்களுடன் மாநிலங்களுக்கு இடையேயான பரிமாற்ற கட்டணங்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன.

டிசம்பர், 2032 வரை திறந்த அணுகல் நுகர்வோருக்கு வழங்கப்படும் ஆப்ஷோர் காற்றாலை திட்டங்களிலிருந்து உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்திற்கு கூடுதல் கட்டணம் தள்ளுபடி செய்யப்படுகிறது.

இவ்வாறு பதில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.




சேலம் கிழக்கு மாவட்டம் ஆத்தூர் கிழக்கு ஒன்றியம் தி.மு.க, சார்பில் ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாட்டிற்கு நிதி ஒதுக்காததற்கு ஒன்றிய பா.ஜ.க. அரசையும், அதற்கு ஆதரவாக செயல்படுவதாக அ.தி.மு.க.வையும் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்றியக் கழகச் செயலாளர் டாக்டர் வே. செழியன் தலைமையில் நடைபெற்றது. இதில் தி.மு.க. நிர்வாகிகள் , கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### உர ஆலைகள் மூடல் – இறக்குமதி இரண்டு மடங்கு உயர்வு – விலை உயர்வு அபாயம்!

# மோசமான நிர்வாகத்தால் விவசாயிகளை பாதிப்புக்குள்ளாக்கும் ஒன்றிய அரசு!

## மக்களவையில் கே.இ.பிரகாஷ் கடும் கண்டனம்!

*புதுடெல்லி, பிப்.15-*

*உர ஆலைகள் மூடல்; இறக்குமதி இரண்டு மடங்கு உயர்வு; விலை உயர்வு அபாயம். மோசமான நிர்வாகத் தால் விவசாயிகளை பாதிப்புக்கு உள்ளாக்கும் ஒன்றிய அரசுக்கு கே.இ.பிரகாஷ் எம்.பி. கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.*

*இந்தியாவின் உர இறக்குமதி பன்மடங்கு அதிகரித்து விலை உயர்வு அபாயம் ஏற்பட்டுள்ள நிலையில், விவசாயிகளை பாதுகாக்க ஒன்றிய அரசு என்ன நடவடிக்கைகள் எடுத்து வருகிறது என்று நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பினேன்.*

*இதற்கு ஒன்றிய அரசு அளித்துள்ள பதில்கள் பெரும் ஏமாற்றத்தை அளிக்கிறது என்பதுடன், விவசாயிகளின் வாழ்வாதாரத்தைப் பற்றிய கவலையையும் அதிகப்படுத்தியுள்ளது.*

*1. இரண்டு மடங்கு அதிகரித்த உர இறக்குமதி; 'ஆத்மநிர்பார்' முழக்கங்கள் வெறும் ஏமாற்று!*

*நாடாளுமன்றத்திலும், மேடைகளிலும் 'ஆத்மநிர்பார் பாரத்' என்று முழங்கி வருகிறது ஒன்றிய அரசு. ஆனால், நடைமுறையை எடுத்துப் பார்த்தால், வேளாண் நாடாக அறியப்படும் நம் நாட்டை மிக அடிப்படைப் பொருளான உரத்திற்கு வெளிநாடுகளிடம் கையேந்த விட்டிருக்கிறது.*

*ஒன்றிய அரசின் தரவுகளின் படி, 2024-25 ஏப்ரல் முதல் நவம்பர் வரை, 32.55 லட்சம் மெட்ரிக் டன்னாக இருந்த இந்தியாவின் உர (Urea) இறக்குமதி, நடப்பு ஆண்டான 2025-2026ல் 71.71 லட்சம் மெட்ரிக் டன்னாக உயர்ந்துள்ளது. இது 120% அதிகம் மற்றும் ஏறக்குறைய இரண்டு மடங்கு உயர்வு.*


*2. மூடப்படும் உள்நாட்டு உர ஆலைகள்; ஆனால், ஒன்றிய அரசு மௌனம்!*

*காக்கிநாடா, கான்பூர் போன்ற இடங்களில் உள்ள முக்கியமான உர ஆலைகள் மூடப்பட்டதே உள்நாட்டு உற்பத்தி குறையக் காரணம் என்று ஒன்றிய அரசு ஒப்புக்கொண்டுள்ளது. இதற்குப் பின்னணியாக, நிறுவனங்களின் நிதி நெருக்கடி மற்றும் நிர்வாகப்பிழையை கூறியுள்ளது.*

*இரண்டு கேள்விகள் மக்கள் மனதில் உதிக்கின்றன. ஒன்று, அவற்றை முக்கியமான ஆலைகள் என்று குறிப்பிடும் ஒன்றிய அரசு, ஏன் அந்த ஆலைகளை மீட்டெடுத்து உற்பத்தியைத் தொடர எந்தத் திட்டமும் வகுக்கவில்லை? இரண்டு, இறக்குமதியை அதிகரிப்பதற்காக உள்நாட்டு ஆலைகள் கவனிக்கப் படாமல் செல்கின்றனவா? விடப்பட்டு மூடும் நிலைக்குச்*

*இரண்டிலுமே ஒன்றிய அரசின் மெத்தனமும் மோசமான நிர்வாகமும் ஒளிந்திருக்கின்றன.*

*3. மானியம் என்பது சமாளிப்பு, உள்நாட்டு உற்பத்தியே தீர்வு!*



*உர ஆலைகளை மூட விட்டு விட்டு, இறக்குமதியை பன்மடங்கு அதிகரித்துக் கொண்டு, ஒரு போலி ஜம்பமாக உரங்களுக்கு மானியம் வழங்கப் படுவதை குறிப்பிட்டுள்ளது ஒன்றிய அரசு.*

*சந்தையில் விலையை சீராக வைக்க வேண்டுமானால், உள்நாட்டு உற்பத்தி அவசியம் என்பதை எந்த வல்லுநரும் கூறுவார்கள். அதில் கோட்டை விட்டுவிட்டு, மானியம் வழங்குவதை உயர்த்திப் பேசி என்ன பயன்? எத்தனை நாளைக்கு மானியத்திலேயே வண்டி ஓடும்? இந்த உள்நாட்டு உற்பத்திப் பின்னடைவு, விரைவில் உரங்களின் விலை உயர்வாக வெடிக்கும் அபாயம் கொண்டது.*

*ஒன்றிய அரசு 'ஆத்மநிர்பார்' என்று விளம்பரம் செய்து ஊரை ஏமாற்றுவதை நிறுத்திவிட்டு, உள்நாட்டு ஆலைகள் மூடப்படுவதை தடுத்து நமது உர உற்பத்தியைப் பெருக்க வழிவகை செய்ய வேண்டும் என்றார்.*





கோவை மாவட்டம், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம், கோவை கோட்டம் மூலமாக அனைவருக்கும் வீடு திட்டத்தின் கீழ் கோவை மாநகராட்சி 91வது வார்டுக்குட்பட்ட நேதாஜிபுரம் பகுதியில் தரை மற்றும் 3தளத்துடன் ரூ.6253.00 லட்சம் திட்ட மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 720 அடுக்குமாடி குடியிருப்பு பயனாளிகளுக்கு ஆணைகளை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி தலைமையில் பொள்ளாச்சி பாராளுமன்ற உறுப்பினர், திருப்பூர் தெற்கு மாவட்ட கழகப் பொறுப்பாளர் கே.ஈஸ்வரசாமி, கோவை மாநகராட்சி மேயர் கா.ரங்கநாயகி ராமச்சந்திரன் வழங்கினார். இதில் பகுதி கழக பொறுப்பாளர் முரளி, மாநகராட்சி துணை மேயர் வெற்றிச்செல்வன், மாமன்ற உறுப்பினர் மு.ராஜேந்திரன் உள்பட ஒன்றிய, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### குறிச்சி இரா. நாகராசன்

### பிப்ரவரி 15 (2005)



**கோவை மாவட்டம், குறிச்சி பேரூர் கழகமாக இருந்தபோது, சுந்தராபுரம் கிளைப் பொருளாயராக பணியாற்றத் தொடங்கி, பேரூர் ஒன்றிய அவைத் தலைவர், குறிச்சி பேரூர் செயலாளராகவும், பின்னர் குறிச்சி நகரமான பிறகு, நகரச் செயலாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், மாவட்டப் பொருளாளர் என பல்வேறு பொறுப்புகளை வகித்து கழகப் பணியாற்றியவர்.**

**குறிச்சி நகராட்சித் தலைவராக கழகத்தின் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்டு, சிறப்பாக பணியாற்றி அப்பகுதி மக்களின் மனதில் இடம் பிடித்தவர்.**

**கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### த.வேணுகோபால்

### பிப்ரவரி 15 (2024)



**தந்தை பெரியாரின் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு, திராவிட இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றத் தொடங்கியவர்.**

**திருவண்ணாமலை மாவட்டக் கழக அவைத் தலைவராக முப்பதாண்டு காலம் பொறுப்பேற்று பணியாற்றியவர்.**

**ஊராட்சி மன்ற தலைவராக – ஒன்றிய பெருந்தலைவராக – இரண்டு முறை தண்டராம்பட்டு தொகுதி சட்டமன்ற உறுப்பினராக – நான்கு முறை திருப்பத்தூர் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராக – 2009ஆம் ஆண்டு திருவண்ணாமலை தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராக என 60 ஆண்டுகளுக்கும் மேலாகப் பொதுவாழ்வில் ஈடுபட்டு மக்கள் பணியாற்றியவர்.**

**கழகம் அறிவித்த இந்தி எதிர்ப்பு உள்ளிட்ட அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**2019ஆம் ஆண்டு திருவண்ணாமலையில் நடைபெற்ற முப்பெரும் விழாவில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், "பெரியார் விருது" வழங்கி சிறப்பித்தார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**